பக்கங்கள்:10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 09 ஞாயிற்றுக்கிழமை 24.112024 கதிர் 017



## நல்லூரில் மாவீரர் நினைவாலயம்





யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக உள்ள பகுதிகளில் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் அடங்கியநினைவாலயம்மக்கள்அஞ்சலிக்காக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மாவீரர்களின் பெற்றோர் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் நேற்று மாலை 6 மணியளவில் 8

## இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை அனுபவித்து வந்த சில சலுகைகள் குறைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

25, 26, 27 ஆகிய நாள்களில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமானபயிலரங்கம் நடைபெற உள்ளது. இந்தச் செயலமர்வில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் குறித்து நாடாளுமன்ற விவகார அமைச்சகம் தெரிவிக்கும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கி வழங்கப்பட்டு வந்த நிலையில் அந்த வசதியை நீக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுதவிரஒவ்வொருநாடாளுமன்ற உறுப்பினருக்கும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2

## தமிழ்த் தேசியத்தை மக்கள் கைவிட்டுவிடவேயில்லை

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தமிழ்த்தேசமும், தமிழ்த்தேசியமும் அழியவில்லை. மாறாகதமிழ்த்தேசியத்தைஆதரித்தோர் தம்முள் பிரிந்து நின்று ஆளும்தரப்பை வெற்றியடையச்செய்திருக்கிறார்களே தவிர,தமிழ்த்தேசியத்தைத்தமிழ்மக்கள் கைவிட்டுவிடவில்லைஎனதமிழ்த்தேசிய மக்கள்கூட்டணியின்தலைவரும், 2

## தேசியப் பட்டியல் ஆசனம் சுதந்திர கட்சிக்கு வேண்டும்

### நிமல் சிறிபால பிடிவாதம்

புதிய ஜனநாயக கூட்டணிக்குக் கிடைத்த இரு தேசியப் பட்டியலில் ஒன்று ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்குத் தரப்பட்டே ஆகவேண்டும் என்று அக் கட்சியின் தவிசாளர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழு 8

### முன்னாள் தேர்தல் ஆணையாளர்

## மஹிந்த தேசப்பிரியவின் வீடு உடைத்துத் திருட்டு

முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்ததேசப்பிரியவின்அம்பலாங்கொடை இல்லத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 300,000 ரூபா பெறுமதியான பொருட்கள்திருடப்பட்டுள்ளதாகபொலிஸார் 8

# நாணய நிதியத்துடன் 3ஆம் கட்ட இணக்கம்

## ஊழியர் மட்டத்தில் எட்டப்பட்டது

**சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக் கான நீடிக்கப்பட்ட கடன் வசதிக்குற்பட்ட 330 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 3ஆம் கடன் தவணை தொடர்பில் ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக சர்வதேசநாணயநிதியத்தின்இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் தெரிவிக்கிறார்.**

**இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில்நேற்றுமுற்பகல்செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:**

**சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள 4 வருட காலப்பகுதியைக் கொண்ட நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பில் நாட்டின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம். இந்த கலந்துரையாடல்களின் பிரதிபலனாக ஊழியர்மட்டஇணக்கப்பாடுஎட்டப்பட்டுள்ளது.**

**ஊழியர் மட்ட இணக்கப்பாடு** 2

## தேசியப் பட்டியல் தொடர்பில் நெருக்கடிகள் ஏதுமில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

தேசியப்பட்டியல்நியமனம்தொடர்பில் கட்சிக்குள் எந்தவித நெருக்கடியும் இல்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும்எதிர்க்கட்சித்தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியா ளார்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பட்டியல் நியமனம் தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும். 2

## கன மழைக்கு நாளை வாய்ப்பு

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் நாளை சுமார் 150 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல்திணைக்களம் 2



## அடுத்த வருட தொடக்கத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல்

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்தப்படும் என வெளிவிவகார,வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாஅமைச்சர் 8

## குறைந்த எரிபொருள் பயன்பாட்டு வாகனங்களே எம்.பிக்களுக்கு

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் குறைந்த எரிபொருள் செலவுடைய வாகனம் வழங்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றஉறுப்பினர்கள் தமதுபதவிக்காலம்முடியும்வரை அந்த வாகனத்தை பயன்படுத்தி மக்கள் சேவையை மேற்கொள்ள முடியும்என்றுஅமைச்சர்ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப்படாதுஎனவும்மக்களின் வரிப்பணம் விரயமாவதை குறைக்கும் வகையில் 8

### உயர் தர பரீட்சை மண்டபத்தில்

## பொறுப்பதிகாரிகள் மாத்திரமே கைப்பேசி பயன்படுத்தலாம்

நாளை ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் 2

## தமிழ் அரசுக் கட்சியை வடக்கில் பலப்படுத்தித் தருவதற்குத் தயார்

### பொறுப்பைத் தந்தால் செய்து காட்டுகின்றேன் என்கிறார் சாணக்கியன் எம்.பி.

வடக்கிலும் தமிழ் அரசுக் கட்சியைக்கட்டியெழுப்புவதற்குத் தாம் தயாராக உள்ளார் என்றும் பொறுப்பைத் தந்தால் அதனை நிறைவேற்றுவதற்கு தான் தயார் என்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு-பட்டிப்பளையில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும்கூட்டத்தில்உரையாற் றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும் 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பாதுகாப்பு இதுவரை வழங்கப்பட்டு வந்தது. அதுவும் நீக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டு வந்த வரியில்லா வாகன அனுமதிப்பத்திரமும் நிறுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான உடன்படிக்கை அங்கீகாரம் பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மீளாய்வின் இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு சில விடயங்களை எதிர்பார்க்கின்றது. 2025 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினை சமர்பித்து அதன் ஊடாக மேலதிக வருமான ஈட்டுவதை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது நிறைவேற்றுக்குழு இணக்கப்பாடு அனுமதி கிடைப்பட்டதை அடுத்து இலங்கைக்கு 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் உதவியாகக் கிடைக்கும்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைத்த நிதியின் தொகை 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும்.

நீடிக்கப்பட்ட கடன் திட்டத்தில் கடன்மறுசீரமைப்பு நிகழச்சி நிரலானது மிகவும் முக்கியத்துவம் பெறுதாக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் எதிர்பார்ப்பு கடன்மறுசீரமைப்பிலேயே தங்கியுள்ளது.

புதிய ஆளும்தரப்பு இந்த விடயத்தில் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிகவும் முக்கியமானது. மிகப்பெரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றுக்கொள்ளப்பட்ட இந்த செயற்பாட்டை பாதுகாப்பதாக இருந்தால் கடன்மறுசீரமைப்பு மிகவும் முக்கியமானதாகும்.

ஆளும்தரப்பின் நிதிக்கொள்கை தொடர்பில் நாம் கலந்துரையாடினோம். அதுவொரு முக்கியமான விடயமாகும். ஆளும்தரப்பின் வருமானத்துக்கு காணப்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பில் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இலங்கை தனது வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு கிடைக்கின்ற மிக அரிதான சந்தர்ப்பமே இதுவாகும். ஆகவே இந்த விடயங்களை மிகச்சரியாக முகாமை செய்யவேண்டும். நாட்டின் கையிருப்பு தொடபில் சிந்தித்து மிகக் கவனமாக விடயங்களை கையாள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடுகளுக்கு அமைய இந்த ஆண்டு ஜூன் மாத இறுதி வரையிலான இலக்குகள் குறிப்பிடத்தக்க அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், செப்டெம்பர் அளவில் வேலைத்திட்டத்தின் செயற்றிறன் வலுவாகக் காணப்படுகிறது.

ஒக்டோபர் மாதத்திற்கு முன்னதாக பெரும்பாலான கட்டமைப்பு ரீதியான இலக்குகள் தாமதத்துடனேயே செயற்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஆளும்தரப்பிற்கான மக்கள் ஆணையைப் பெறவேண்டி இருந்தது இதற்குக் காரணமாக இருக்கலாம். ஊழல் இன்றி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கானது வறிய மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் பொறுப்பு ஆளும்தரப்புக்கு உள்ளது.

நீடிக்கப்பட்ட கடன் வசதியின் மூன்றாவது தவணையை விடுவிப்பதற்கான மீளாய்வுக்காக கடந்த 17 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கை ஆளும்தரப்பின் பிரதிநிதிகள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான அணியினர் உள்ளிட்டவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## கன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

## பொறுப்பதிகாரிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சையின் போது, பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளுக்கு மாத்திரமே பரீட்சை நிலையங்களுக்குள் கைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அமைச்சில் நேற்று செய்தியாளர்களை அழைத்துப் பேசிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கான தேவை உள்ளதால் மாத்திரமே அவர்களுக்கும் கைபேசி பாவனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிக பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் கைபேசிகளை பரீட்சை பயன்படுத்த முடியும் முன்னதாக பரீட்சை மண்டபத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் கைபேசிகளை பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இந்தமுறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் போது, பரீட்சை மண்டப உதவி பொறுப்பதிகாரிகள் அல்லது கண்காணிப்பாளர்கள் கைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

அதேநேரம், பரீட்சை காலங்களில் இடர்களால் பாதிக்கப்படும் பரீட்சார்த்திகளுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. முதல் ஆறு நாட்களுக்குத் தேவையான வினாத்தாள்கள் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையானது 2,312 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளது. இந்த முறை குறித்த பரீட்சைக்காக 333,183 பேர் தோற்றவுள்ளனர். அவர்களில் 253,380 பாடசாலை பரீட்சார்த்திகளும் 79,795 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குகின்றனர். உயர்தரப் பரீட்சை தொடர்பான விரிவுரைகள், பயிற்சி வகுப்புகள், மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு ஏலவே தடை விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தற்போது, கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைகளுக்கான மாதிரி வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களை அச்சிடுவது மற்றும் விநியோகிப்பது ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

## தமிழ்த்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாதத்துக்கொரு கேள்வி - பதில் பகுதி என்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையில் 'தமிழ்த்தேசியம் அழிந்துவிட்டதா? தேர்தல் முடிவுகள் அதனை உறுதிப்படுத்துகின்றன அல்லவா?' என எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே சி.வி.விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

தமிழீழம் பெறமுடியாமல் போய்விடுமா என்று பிரபாகரனிடம் ஒருவர் கேட்டார். அதற்கு அவர் "தமிழீழத்தைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. அது ஏற்கனவே இருக்கிறது. அதனைப் பாதுகாப்பதற்காகத் தான் நாங்கள் போராடுகின்றோம்' எனப் பதிலளித்தாராம்.

அதேபோன்று தமிழ்த் தேசம் ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது. அதனைப் பாதுகாக்கும் மனோநிலையே தமிழ்த்தேசியம். அது அழிந்துவிடவில்லை. தேர்தலின் பின்னர் தமிழ்த்தேசத்தை நெருக்கப் பலவற்றில் இராணுவத் தடைகள் நீக்கப்பட்டதைப் பார்த்திருப்பீர்கள்.

ஒரே நாட்டுக்குள் தமிழ் பேசும் பிரதேசங்களில் மாத்திரம் ஏன் இந்தப் பாகுபாடு எனும் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. வட, கிழக்கு மாகாணங்கள் தமிழ்மொழி பேசும் பிரதேசங்கள் என்ற உண்மையை உணர்ந்து செயலாற்றுபவர்களை தமிழ்த் தேசியத்தை அழிப்பவர்கள் என்று அடையாளம் காட்டமுடியாது.

தமிழ்த் தேசிய சிந்தனையை வைத்து வியாபாரம் நடத்தியவர்கள் தேர்தலில் காணாமல் போயிருக்கிறார்கள். தமிழ்த் தேசிய சிந்தனையை ஏளனம் செய்து, கட்சிகளைப் பிரித்து சுயநல அரசியல் நடத்திய ஒருவர் காணாமல் போயிருக்கிறார்.

இருப்பினும் நடைபெற்று முடிந்த தேர்தலில் வட, கிழக்கில் ஆளும்தரப்பு ஆசனங்களைப் பெற்றிருப்பதே உங்களது கேள்விக்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் இந்தத் தேர்தல் முடிவுகள் எமக்கு இறைவனால் தரப்பட்ட வரப்பிரசாதமாகும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியத்தை ஆதரித்தவர்கள் இன்னமும் தமிழ்த் தேசியத்துடன்தான் இருக்கிறார்கள். இருப்பினும் பல சுயேச்சைக் குழுக்களின் தோற்றம் மற்றும் பல வருடகால அரசியல் கட்சிகள் தேர்தல் உடன்பாடுகளுக்கு இடம்கொடுக்காமை போன்றவற்றால் அவர்கள் செய்வதறியாது பிரிந்துநின்று வாக்களித்திருக்கிறார்கள்.

அதேவேளை தமிழ்த்தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகளுக்குக் கிடைத்திருக்கும் வாக்குகளின் மொத்தத் தொகையைப் பார்த்தால், தமிழ்த் தேசியத்துக்கான எமது மக்களின் ஆதரவு குறையவில்லை என்ற விடயமே புலனாகிறது.

ஆகவே தமிழ்த் தேசமும், தமிழ்த் தேசியமும் அழியவில்லை. மாறாக தமிழ்த் தேசியத்தை ஆதரித்தோர் தம்முள் பிரிந்து நின்று ஆளும்தரப்பை வெற்றியடையச் செய்திருக்கிறார்களே தவிர, தமிழ்த் தேசியத்தைத் தமிழ் மக்கள் கைவிட்டுவிடவில்லை.

அதேவேளை ஐ.நா. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் உறுப்புரை ஒன்றின்கீழ் இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்கள் தமிழ்த்தேசம் என்பதை எந்தவொரு இலங்கை ஆளும் தரப்பும் ஏற்காதவரை, வட, கிழக்கு தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும் என்றார்.

# அயலுறவுச் செயருடன் நேற்று இந்திய, சீனத் தூதர்கள் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் சீனத் தூதுவர் கீ சென் ஹொங் ஆகியோர் வெளியுறவுச் செயலாளர் ரணராஜாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். அவரது நியமனத்துக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ள அவர்கள் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்திய உயர்ஸ்தானிகர் தனது சந்திப்பின் போது வெளிவிவகார செயலாளர் அருணி ரணராஜாவின் புதிய பொறுப்புக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும், பரந்தளவிலான இருதரப்பு விவகாரங்கள் குறித்தும் பன்முகக் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டையும் மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சீன தூதுவர் தனது சந்திப்பில் வெளிவிவகாரச் செயலாளருக்கு வாழ்த்தியுள்ளதோடு, இருதரப்பு உறவுகளின் வளர்ச்சியை மேம்படுத்துதல், இருநாடுகளுக்கு இடையே நடைமுறை ஒத்துழைப்பை ஆழமாக்குதல் மற்றும் பொதுவான அக்கறையுள்ள பிரச்சினைகள் குறித்தும் இரு தரப்பும் ஆழமான கருத்துக்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டுள்ளன.

சீன தூதுவர் புதிய சபாநாயகர் அசோக ரன்வாலாவைச் சந்தித்து, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். மேலும் இந்த சந்திப்பின் போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல், இருநாட்டு சட்டமன்ற அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு இடையே பரிமாற்றங்களை வலுப்படுத்துதல் மற்றும் இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஆழமான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடற்றொழில் அமைச்சர் வருகை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் மிக விரைவில் நேரில் விஜயம் மேற்கொண்டு, சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்வார் என கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று நேரில் வருகை தந்த கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், வைத்தியசாலையின் சேவை நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்.

வைத்தியசாலையின் வளர்ச்சி மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான தேவைகளை வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் சாத்தியமூர்த்தியிடம் நேரடியாக கேட்டறிந்த அவர், சாதகமான மாற்றங்களை கொண்டுவர சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடி, தன்னால் முடிந்த எல்லாவற்றையும் மேற்கொள்ளவதாக உறுதியளித்தார்.

அத்துடன், சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ விரைவில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வருகை தருவார் எனவும், இதன் மூலம் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார்.

## தமிழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஜனாதிபதி உரிய முறையில் செயற்படுவாராயின் அவருடைய அனைத்துச் செயற்பாடுகளையும் எதிர்க்க வேண்டிய தேவையில்லை எங்களுக்கு இல்லை. சர்வதேச நாணய நிதியத்தினை எதிர்த்துப் பிரசாரம் செய்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்பாட்டை எட்டியுள்ளார்.

புதிய ஆட்சியில் இராணுவத்தால் போடப்பட்ட வீதித்தடைகள் அகற்றப்பட்டுள்ளன. சில முகாம்கள் நகர்த்தப்பட்டுள்ளன. சில விடயங்கள் முன்னேற்றகரமாகக் காணப்படுகின்றன. நான் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைக் கண்ட போது நாங்கள் சேர்ந்து பணியாற்றுவோம் என்று கூறியுள்ளேன்.

தமிழ் மக்களுக்கு அபிலாஷைகள் உண்டு. அதனை ஜனாதிபதியால் மறுக்க முடியாது. நாங்கள் சமத்துவமாக வாழ்வதை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும் - என்றார்.

## தேசியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பட்டியலுக்காக தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் மிகவும் பொருத்தமானவர்கள். நாட்டை கட்டியெழுப்புவதில் அவர்கள் அனைவருக்கும் பெரும் பொறுப்பு இருக்க வேண்டும். இந்த பட்டியலில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் உள்ளனர்.

வீழ்ச்சி கண்டுள்ள நாட்டையும் 220 இலட்சம் மக்களையும் மீட்டெடுப்பதே தனது எண்ணப்பாடாக இருக்கிறது. நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை குறித்து நாட்டு மக்களே ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

எவ்வாறாயினும், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கு ஏற்ப அனைத்து உறுப்பினர்களும் செயற்பட வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரே நோக்கோடு உழைத்து இலங்கையை சிறந்த நாடாக மாற்ற அர்ப்பணிப்போம்

## அரச ஊழியர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

தாய்நாட்டை சிறந்த நாடாக மாற்றுவதற்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு அனைத்து அரச ஊழியர்களுக்கும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அக்குரேகொட பாதுகாப்பு படைத் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு அமைச்சராக வெள்ளிக்கிழமை முற்பகல் கடமைகளைப் பொறுப்பேற்ற போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு அங்கிருந்த ஊழியர்களால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரதானிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

சிறந்த ஆட்சியை உருவாக்குவதற்காக புதிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் அனைவரினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசமைப்பிலும் சட்டங்களிலும் எத்தகைய சட்ட ஒழுங்குகள் இருந்தாலும் மக்களின் அதிகாரம் தான் பலமாக உள்ளது என்பதை வலியுறுத்திய ஜனாதிபதி, கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட ஆணைகளின் கட்டமைப்பு மற்றும் வடிவங்களைப் பார்க்கும்போது அவர்களின் எதிர்பார்ப்புகள் பிரதிபலிக்கின்றன என்றும் தெரிவித்தார்.



இந்த மாற்றம் அவர்களினதும் எதிர்பார்ப்பு என்பது அண்மைக்கால தேர்தல்வரலாற்றில் அரசசேவையால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட சுமார் 80 வீத ஆணை எடுத்துக்காட்டுகிறது என்றும்ஜனாதிபதிமேலும்தெரிவித்தார்.

எனவே, தமது அரசாங்கத்திற்கு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்றுவதற்கு அரசியல் தலைமைத் துவத்தை வழங்குவதைத்தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை எனத் தெரி வித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநா யக்க, அதனை நனவாக்க அரசஊழியர் களின் ஆதரவு அவசியம் என்றார்.

அனைவரும் எதிர்பாக்கும் இந்தப் புதிய மாற்றத்தில், அரச சேவையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தாமல் முன்னேற முடியாது என்றும், வளர்ச்சியடைந்த ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு பாய்ச்சலை ஏற்படுத்தியது அரச சேவைதான் என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொண்தா, பாதுகாப்புப் பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, பாதுகாப்பு படை உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நாடாளுமன்ற உறுப்பினராகிய லயன் ரஜீவனுக்குக் கௌரவம்







யாழ்.மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தேசிய மக்கள் சக்தி ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய முன்னாள் அதிபர் லயன் ஜெ.ரஜீவனுக்கு வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு செட்டித்தெரு சூர்யா விடுதியில் 306B1 லயன்ஸ் கழக உறுப்பினர்களால் மகத்தான கௌரவிப்பு இடம்பெற்றது.

கொழும்பு கிறாண்வே லயன் கழக உறுப்பினர் லயன் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதான அனுசரணையாளராக முன்னாள் ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமார், லயன் நிமால் செல்வரட்ணம், லயன் பத்மராஜ், லயன் மகேஸ் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

முன்னாள் ஆளுநர் லயன் ஜெயவட்சலம் உட்பட பல லயன்ஸ்கழக நண்பர்கள் தம்மில் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகியமையை பெருமனதுடன் வாழ்த்தி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் பாராட்டு





ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் ஜப்பானிய தூதுவர் அகியோ இசோமடாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலானபுதியஅரசாங்கத்திற்கு வாழ்த்துத் தெரிவித்த ஜப்பானிய உயர்ஸ்தானிகர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை திறம்பட தொடர்ந்தும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வீண் விரயம், ஊழல், மோசடியற்ற நாட்டை உருவாக்கி நாட்டை பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்லும் புதிய கொள்கைக்கு ஜப்பான் அரசாங்கத்தின் பாராட்டுக்களைதெரிவித்த அகியோ இசோமடா, இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்கவிற்கும்சிறந்த ஆதரவை வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழர்களிற்கு ஆதரவாகயிருப்பது குறித்துப் பெருமிதமடைகின்றோம்

## தமிழீழ தேசிய கொடி நினைவுநாளில் கனடா மேயர்

தமிழ் சமூகத்திற்கு ஆதரவாகயிருப்பது குறித்து பெருமிதம் கொள்வதாக கனடா ஒன்டாரியோவின் உத்தியோகபூர்வ எதிர்கட்சியின்மாரிட்ஸ்டைல்ஸ்தெரிவித்துள்ளார்.

தமிழ்ஈழதேசியகொடிதினத்தைகுறிக்கும் நிகழ்வு குறித்து விடுத்துள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

இன்று தமிழீழ தேசிய கொடிதினத்தில் ,ஒன்டாரியோவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் நாங்கள் தமிழ் சமூகத்தின் வரலாற்றையும் கலாசாரத்தையும் கௌரவிக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய நாள் தமிழனப்படுகொலை மற்றும் முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட தமிழ் மக்கள் பல தசாப்தங்களை அனுபவித்த வன்முறைகளை நினைவுகூரும் நாளாகும்.

இந்த அட்டூழியங்கள் நினைத்துப்பாக்கமுடியாத வலியை துயரத்தை ஏற்படுத்தின அதேவேளை இது தமிழ்சமூகத்தின்உறுதிப்பாட்டையும்வலிமையையும் வெளிப்படுத்தியுள்ளன.



தமிழ்சமூகம்நீதிமற்றும்மனிதஉரிமைகளிற்கான போராட்டத்திற்கான உத்வேகத்தை அளிக்கின்ற ஒரு சமூகம்.

புதிய ஜனநாயக கட்சியினராகிய நாங்கள் தமிழ் சமூகத்திற்கு ஆதரவாகயிருப்பது குறித்து பெருமிதம் கொள்கின்றோம்.

உங்கள் கலாசாரம் மீள் எழுந்தன்மை மற்றும் பங்களிப்புகள்எங்கள்மாகாணமானஒன்டாரியோவை வளப்படுத்தி, டீஎங்கள் அனைவருக்கும் சிறந்த இடமாக்குகின்றது.

இன்றைய நாளில் நாங்கள் செய்யப்பட்ட தியாகங்களை மீள நினைவுகூருவதுடன், நீதி சமாதானம் ஆகியவற்றிற்காக மீண்டும் அர்ப்பணித் துக்கொள்வோம். - என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய சட்டங்கள் அவசியம்தான்

இலங்கையில்பெண்கள்மீதானகுடும்பவன்முறைமிக அதிகளவில் காணப்படுகின்றது. கணவன், மாமனார், மாமியார் என வீட்டில் உள்ளவர்களால் பெண்கள் அதிகளவில் குடும்ப வன்முறைக்கு உள்ளாகின்றனர். சில வீடுகளில் பெண்கள் பெண்களாலேயே துன்புறுத்தப்படுகின்றனர். குடும்பங்களில் உள்ள சிறார்களின் நலன்கருதி குடும்ப வன்முறையை நிறுத்துவதற்கேற்றவகையிலானகடுமையானசட்டங்கள் அமுலாக்கப்பட வேண்டும் என்று பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. டன்ஸ்டன் மணி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

”நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் நாட்டின் அனைத்துப் பகுதி மக்களினதும் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்துள்ள தற்போதைய அரசு குடும்பங்களில் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளைநிறுத்துவதற்குஉடனடிநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் குடும்பங்களில் இடம்பெறும் வன்முறைகள் அக்குடும்பச் சூழலில் வளரும் சிறார்களை பெருமளவில் பாதிக்கின்றது. மட்டுமன்றி அவர்களை உளரீதியாகவும் பாதிக்கின்றது. எனவே இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அநேக குடும்பங்களில் தமது உறவினர்களால் வன்முறைக்கு உள்ளாக்கப்படும் பெண்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வழி தெரியாமல் பரிதவிக்கின்றனர். அவ்வாறு பாதிக்கப்படும் பெண்கள் தங்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக உடனடி நிவாரணம் பெறும் வகையில் உடனடி தொலைபேசி இலக்கமொன்றும் அறமுகப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறான தொலைபேசி இலக்கமொன்று இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது’’ என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அவரது கோரிக்கை நியாயமானதுதான் என்பதை அனைத்துப்காவல்நிலையங்களிலும்குவியும்பெண்கள் மீதான வன்முறைகள் குறித்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையே வெளிப்படுத்தும். நாளாந்தம் காவல் நிலையங்களுக்கு வரும் முறைப்பாடுகளில் பெரும் எண்ணிக்கையானவை இந்த முறைப்பாடுகளே. இவற்றிலும்காவல்துறையினரால்சமாதானப்படுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுபவர்களின் முறைப்பாடுகள் பதியப்படுவதில்லை என்பதால் புள்ளிவிவரங்களில் அவை இடம்பெறுவதில்லை.

அதற்கும் மேலாக காவல் நிலையங்களுக்கு வராமலேயே இருக்கும் குடும்ப வன்முறைகளின் எண்ணிக்கையும் மிக மிக அதிகம். இவற்றையெல்லாம் பார்க்கும்போது குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களைக் காப்பதற்கான சட்டங்கள் அவசியமானவைதான். அவற்றை வெறும் குடும்பச் சண்டைகளாகக் கடந்து செல்வது பெண்களுக்கே செய்யும் துரோகமாகிவிடும். குடும்பப் பெண்கள் வன்முறைகளால் பாதிக்கப்படுவது என்பது ஒட்டுமொத்த குடும்பத்தையுமே பாதிக்கும் என்பதால் விரைவில் புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கு அல்லது புதிய அரசமைப்பில் இது தொடர்பான சட்டங்களையும் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியம்.

# அநுரவுக்கு அமெரிக்கா ஆதரவா?

**உபுல் யோசப் பெர்னான்டோ**

கிழக்கில் பொத்துவில் அருகே உள்ள அறும்குடா சுற்றுலா மையத்தில் தங்கியிருந்த இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படப்போகின்றத என்ற அச்சம் காரணமாக இலங்கைக்குச் செல்லும் தனது நாட்டு சுற்றுலாவிகளுக்கு அமெரிக்கா பயண எச்சரிக்கை விடுத்தது. பொதுத் தேர்தலுக்கு ஒரு நாள் முன்னதாக, அந்த எச்சரிகையை அமெரிக்க நீக்கியது. இது



கொழும்பின் அரசியல் வட்டாரங்களில் முக்கிய விவாதப் பொருளாக மாறியது. இந்தக் கடைசி நிமிட முடிவு வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல என்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி ஆளும் தரப்புக்கும் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அநுரகுமாரவின் ஆட்சி அரசியல் ஆதாயத்தைப் பெறத்தக்கவிதத்தில்அமெரிக்கநகர்வுஇருந்ததாகவும், பயண எச்சரிகை விடயத்தை தேசிய மக்கள் சக்தியின் அரசியல் ஆதாயத்தை நோக்கித் தூதரகம் பயன்படுத்தியதாகவும் தெரிகின்றது.

பிலால் மொஹமட்டை கைது செய்ய அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் இலங்கை அதிகாரிகளுக்கு வழங்கிய ஆலோசனையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள்



தெரிவிக்கின்றன. சந்தேகநபர் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு கைது செய்யப்பட்டார், பின்னர் பயண எச்சரிக்கையை நீக்குவதற்கு அமெரிக்கா ஒப்புக்கொண்டது. இருந்தாலும்தேர்தலுக்குமுந்தைய நாள் வரை எச்சரிகையைத் திரும்பப் பெறுவதை அமெரிக்கா தாமதப்படுத்தியதற்குக் காரணம் சேபி மக்கள் சக்தி அதனால் பயனடையவேண்டும் என்பதுதான்.

பிரபல இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாற்றிய தெற்காசிய புவிசார் அரசியல் விவகாரங்களில்நிபுணரானபேராசிரியர்எஸ்.டி.முனி, அநுரகுமார ஜனாதிபதி பதவியைப் பெறுவதற்கு இராஜதந்திர வழிகள் மூலம் அமெரிக்கா பங்களித்தது என்றுதெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில்செல்வாக்கு செலுத்துவதில் அமெரிக்கா கணிசமான பங்கைக் கொண்டிருந்தது என்றும் குறிப்பிட்டார்.

வரலாற்று ரீதியாக, 1970 முதல் 1977 வரை திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியின்போது, ஜே.வி.பி (ஜனதா விமுக்தி பெரமுன) அமெரிக்க நலன்களுக்கு விசுவாசமாக இருந்ததாக முதலில் குற்றம் சாட்டப்பட்டது. ஜே.வி.பி 1971 இல் அவரது ஆளும்தரப்புக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தது, மூத்த இடதுசாரி சாய்வு அமைச்சர்கள் மத்தியில் அசௌகரியத்தை ஏற்படுத்தியது. முதலாளித்துவ நிகழ்ச்சி நிரல்களை இரகசியமாகப் பின்பற்றும் அதேவேளையில் இடதுசாரி கொள்கைகளை அமுல்படுத்துவது குறித்து அமைச்சர்கள் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றனர் என்று ஜே.வி.பி அன்று குற்றம் சுமத்தியது. பதிலடியாக இடதுசாரித் தலைவர்கள் ஜே.வி.பி. அமெரிக்க சிஐஏவின் முகவர்களாகச் செயல்படுகின்றது என்றும் ஆளும்தரப்பைச் சீர்குலைக்க வேலை செய்தது என்றும் குற்றஞ்சாட்டினர்.

இந்தக் கூற்றுகளின் உண்மை நிச்சயமற்றதாக இருந்தாலும், ஜே.வி.பி 2010 ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவின் வேட்புமனுவை ஆதரித்தபோது, மங்கள சமரவீர மூலம் அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியதாக அறியப்படுகிறது. 2015இல், ஜே.வி.பி, தமது வேட்பாளரை நிறுத்துவதற்குப் பதிலாக, அமெரிக்க மற்றும் சர்வதேச செல்வாக்கின் கீழ் இருந்ததாகக் கூறப்படும்மைத்திரிபாலசிறிசேனவைமறைமுகமாக ஆதரித்தது. தற்போதைய அமெரிக்கத் தூதுவர் அநுர மற்றும் விஜித ஹேரத் ஆகியோரின் நெருங்கிய கூட்டாளி என்றும், அநுரவின் அமெரிக்கப் பயணத்தை எளிதாக்கியவர் என்றும் கூறப்படுகிறது. எவ்வாறாயினும், அநுராவிற்கு அமெரிக்க நேரடி ஆதரவைவழங்கியதற்கானஉறுதியானஆதாரங்கள் எதுவும் தெரியவில்லை.

சுவாரஸ்யம் என்னவென்றால், பெரும்பாலும் அமெரிக்க நலன்களுடன் நெருங்கிச் செயற்படும் சிறுபான்மைக் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தையே கூடுதலாக ஆதரித்தன. அநுரவின் வெற்றியை உறுதி செய்வதற்காகவே வட மாகாணத்தில் ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தும் புலம்பெயர் தமிழர்களின் முடிவில் அமெரிக்காவும் ஈடுபாடு காட்டியதா என்பதும் தெளிவாக இல்லை.

# குறிஞ்சாக்கேணி படகு விபத்து நேற்றுடன் 3 வருடங்கள் பூர்த்தி

## இன்னமும் புனரமைக்கப்படாத பாலம்



(ஹஸ்பர்)

திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தில் மரணித்தவர்களின் மூன்றாவது வருட நினைவை முன்னிட்டு விசேட துஆ பிரார்த்தனை நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச் .எம். கனி தலைமையின் கீழ் குறிஞ்சாக்கேணி பால முன்றலில் இடம் பெற்றது. இதன் போது கிண்ணியா நகர சபை செயலாளர், உலமா சபை சூறா சபை , கிண்ணியா பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் உலமாக்கள் மதரஸா மாணவர்கள் உட்பட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த படகு பாதை விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தஇருவர்உள்ளடங்களாகபாடசாலைமாணவர்கள், கர்ப்பிணி தாய் உட்பட சுமார் 08 அப்பாவி உயிர்கள் பலி போனது.

ஆனால் குறித்த குறிஞ்சாக்கேணி கேணி பாலம் கடந்த பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமை கடந்த கால அரசியல் வாதிகளால் வெறும் அடிக்கல் நடப்பட்டு ஏமாற்றம் மாத்திரமே.

இப் பாலத்தின் ஊடாக தினமும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள்பொதுமக்கள்அரசஅதிகாரிகள் என பலரும் பயணம் செய்து வருகின்றனர். பாலத்தின்



ஒரு பகுதி இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே, இது விடயமாக தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர அண்மையில் விஜயம் செய்து பார்வையிட்டார்.மேலும் ஆளும் கட்சியில் திருகோணமலை மாவட்டம் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவான வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறை பிரதியமைச்சர் அருண் கேமச்சந்திர குறித்த பாலத்தில் பால புனரமைப்பு நிதி ஒதுக்கீடு தொடர்பிலான ஊடக சந்திப்பொன்றையும் கடந்த காலத்தில் முன்வைத்திருந்தார்.

எனவே அநுர குமார அரசாங்கத்தில் இதனை முழுமையாக புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட 9 பேர் கைது



(கிஷாந்தன்)

மாவெளி வனப்பகுதியில் பாரிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தி சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்வில் ஈடுப்பட்ட 9 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு பிரதானமாக நீர் வழங்கும் பொகவந்தலாவ மாவெளி வனப்பகுதியில் பாரிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒன்பது சந்தேக நபர்களை நுவரெலியா மீபிலிமான பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.



குறித்த சந்தேக நபர்கள் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடு பட்டு பெரும் சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தியதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்களை கைது செய்ததோடு, மாணிக்கக்கல் அகழ்வதற்கு பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டு பொகவந்தலாவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களை ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பலாங்கொடை மற்றும் பொகவந்தலாவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும், மேலும், இவ்வாறான சுற்றிவளைப்புகள் தொடரும் எனவும் தெரிவித்துள்ளனர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

# மதியூகி மதிசூடி ஒரு முதிசொம் விபுலமாமணி வி.ரி. அனுதாபம்

## சிறந்த தமிழினப் பற்றாளர் மதியூகி மதிசூடி ஓர் முதிசொம்.



கனேடிய தமிழ் வானொலி பத்திரிகை துறையின் முன்னோடிகளில் ஒருவரும் நாடறிந்த பிரபல சமூக சேவையாளருமான குலத்துங்கம் மதிசூடியின் இழப்பு தாயகத்தில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறு பிரபல ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான தேகமான்ய வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா(வி.ரி.) விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்அரியாலையைச்சேர்ந்தகுலத்துங்கம் மதிசூடிகனடாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார் .

அவரது மறைவு குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில் -

பிரபல சமூக சேவையாளர் மதிசூடி கடந்த 40 வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வருகின்றார். அவ்வப்போது இலங்கைக்கு வந்து பலவிதமான சமூக சேவைகளை வடக்கு கிழக்கில் வழங்கி வந்தவர்.

தாம்பிறந்தமண்ணைவெகுவாகநேசித்ததமிழினப் பற்றாளர் மதிசூடி. கொரோனா காலகட்டத்திலும் வெள்ள அனர்த்த காலகட்டத்திலும் இங்கு வந்து பாரிய சேவைகளை செய்தவர்.

அது மாத்திரமல்ல ஒவ்வொரு வருடமும் வந்து நலிவுற்ற மக்களுக்கு நேரடியாகச் சென்று உதவி செய்து வந்தவர். அவரோடு நெருங்கிப் பழகிய ஒருவர் என்ற வகையில் அவரை நல்ல குணங்கள் நிறைந்த குணக்குன்று என்று சொல்வேன்.

ஆன்மீகத்திலும் அதிக ஈடுபாடு கொண்டவர். எமது மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வரும் போதெல்லாம் விஜயம் செய்வார். அமைதியான முறையில் அடக்கமாக சில ஆலோசனைகளை வழங்கி சிறப்பித்து பல ஆக்கபூர்வமான பல திட்டங்களிலும் ஒத்துழைத்தவர். பங்கெடுத்தவர் .

அவர் தமிழினத்தின் மிகுந்த பற்றாளராக விளங்கியவர். கனடாவில் கடந்த 40 வருடங்களாக தாயக மக்களின் உணர்வுகளை விளங்கிடச்செய்தவர்.

இறுதியாககாரைதீவுபாலையடிவாலவிக்னேஸ்வரர் ஆலய கன்னி தேரோட்டத்தில் கலந்து கொண்டதையும் அக்கால கட்டத்தில் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் திறந்து வைத்த சுவாமி விவேகானந்தர் நினைவு பூங்காவை பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அந்த விவேகானந்தர் சிலையை பார்த்த அவர் தாம் பிறந்த அரியாலையில் இந்த உயரத்தில் பிள்ளையார் சிலையை நிறுவ ஆசைப்பட்டு அங்கு அதற்கான இடத்தையும் சகபாடிகளுடன் இணைந்து பெற்றார்.

கூடவே பிள்ளையார் சிலைநிறுவும் கைங்கர்யத்தில் ஈடுபட என்னை அணுகி விவேகானந்தர் சிலையை நிறுவிய சற்குணேஸ்வரனோடு கலந்துரையாடினார்.

தாயக அரசியல் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்து வந்த அவர், தாம் விரும்பி மனப்பூர்வமாக வளர்த்து வரும் தாயக சமூக செயற்பாட்டாளர் துடிப்பான இளைஞர் ஜெயசிறில் அவர்களை வளர்த்துவிட ஆக்கபூர்வமான யோசனைகளை கூறுவார்.

அவரைவிட ஆறு வயது குறைந்த என்னுடன் கலந்துரையாடுவதை பெரிதாக மதிப்பார். பாராட்டுவார். மிகவும் கண்ணியமாக கவனமாக அமைதியாக பேசுவார்.

அன்னார் விட்டபணிகளை தொட்டு செல்வதே எம்மவர் அவருக்கு செய்யும் நன்றிக்கடன் ஆகும்.

# பாலமுனை பாலமுருகன் வித்தி. திறன் வகுப்பறை திறப்பு விழா

## மட்டு.அம்பாறை விஞ்ஞான ஒன்றியம் ஏற்பாட்டுடன்



(சகாதேவராஜா)

மட்டு.அம்பாறைவிஞ்ஞானஒன்றியத்தின் ஏற்பாட்டில் 2 ஆவது திறன் வகுப்பறை திறப்பு விழா நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) பட்டிருப்பு வலயத்தில் உள்ள பாலமுனை பாலமுருகன் வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் நா. புவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இத் திறப்பு விழாவில் பட்டிருப்பு வலயக்கல்வி பணிப்பாளர் சி. சிறிதரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கிராமப்புற மாணவ செல்வங்களுக்கும் தொழில்நுட்ப சாதனங்களினூடாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கில்

இத் திறன் வகுப்பறை அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த வகுப்பறைக்கான நிதியுதவி அமரர் க. தேவா நினைவாக அவரது குடும்பத்தினரால் மனித நேயம் அமைப்பின் ஒருங்கிணைப்பில் விஞ்ஞான ஒன்றியம் மட்டு. அம்பாறை அமைப்பின் நெறிப்படுத்தலில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விஞ்ஞான ஒன்றியம் மட்டு. அம்பாறை அமைப்பின் ஸ்தாபகர் மற்றும் இணைப்பாளர் வ.யதுர்ஷன், விஞ்ஞான ஒன்றியம் மட்டு. அம்பாறை அமைப்பின் தலைவர் தி.கோபிநாத், பொருளாளர் ந. லோகிதன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திருமதி இன்பராஜா, பாடசாலையின் உப அதிபர், ஆசிரியர்கள்,அபிவிருத்திஉத்தியோகத்தர்கள், விஞ்ஞான ஒன்றிய அமைப்பின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர் கிலசன், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மனித நேயம் அமைப்பின் இச் சேவையை பாராட்டி பாடசாலை சமூகத்தால் வ.யதுர்ஷன் அவர்களுக்கும் விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பின் சேவையை பாராட்டி கோபிநாத் அவர்களுக்கும் பாடசாலை சமூகத்தினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



# கற்பிட்டி சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம்

(சியாஜ்)

சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் கற்பிட்டி கிளை 10 ஆவது தடவையாக மேற்கொள்ளும் மாபெரும் இரத்த தான முகாம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் நடைபெற உள்ளது.

உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் என்ற மேற்படி நிகழ்வில் சகலரும் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கி நிகழ்வு வெற்றி பெற உதவுமாறு ஏற்பாட்டு குழு வேண்டிக் கொள்கின்றது.

# சிட்னியில் 'வாத்தியார்' சிறுகதை நூல் வெளியீடு

சிட்னியில் கந்தையா நாகேந்திரம் அவர்களின் சிறுகதை தொகுப்பான 'வாத்தியார்' எனும் நூல் நேற்று (சனிக்கிழமை)

மாலை 05.30 மணிக்கு பிளாக் டவுன் உயர்தர பாடசாலையில் வெளியாகியது.

இந்நூல் வெளியீட்டின் தலைமை உரையை ஆசி கந்தராசா வழங்கினார். இந் நூல் வெளியிட்டு நிகழ்வில் பல்வேறு இலக்கிய ஆர்வலர்களும் பங்கு பற்றி உரையாடினர்.

'வாத்தியார்' சிறுகதை தொகுப்பு வெளியீடும் கருத்து பகிர்தல் நிகழ்ச்சியில் சிவத்திரு குணரத்தினம் பார்த்தீபன் திருமதி துசியந்தி பார்த்தீபன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வி அஸ்வி சிவச்சந்திரன் வழங்கினார். வரவேற்புரையை அனுஜன் நாகேந்திரம் மற்றும் அர்ச்சனா நாகேந்திரம் வழங்கினர்.

வாத்தியார் சிறுகதை நூல் அறிமுகத்தை திருமதி சௌவுந்தரி கணேசனும், புனைகதைகளும் ஆவனப்படுத்தலும் பற்றி முனைவர் திருநாவுக்கரசு கமலநாதனும் உரையாடினர். எழுத்தாளரின் கருத்துகள் பற்றி ஐங்கரன் விக்கினேஸ்வரா உரையாடினார்.

கணித ஆசிரியரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞான பட்டதாரியான கந்தையா நாகேந்திரம் தனது ஆசிரியர் பட்டப் பின் படிப்பை நியூஸிலாந்தில் பெற்றுக்கொண்டார். ஆரம்ப காலங்களில் இலங்கை, சாம்பியா ஆகிய நாடுகளில் ஆசிரியராக பணிபுரிந்தவர்.

கற்பித்தலின் மீது இருந்த ஈர்ப்பினால் இருபது வருடங்களுக்கு மேலாக ஆஸ்திரேலியாவில் உயர் பாடசாலை ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார். கருத்துக்களையும் சிந்தனைகளையும் எழுத்தாக்கி, சமுதாயத்தில் விதைக்கும் ஆசிரியர், தனது பெயரில் மட்டுமல்லாமல் செயலிலும் கேந்திர மையத்தன்மை கொண்டவர்.

தனது சொற்பிரயோகங்களை நகைச்சுவையுடனும், அன்புடனும், தேவையாயின் ஆயுதமாகவும் கையாள்பவரின் எழுத்துகளில் இத்தகைய தன்மைகள் வெளிப்படுகினறன.

இந்நூலின் ஆசிரியர் தனது கதைகளில் வாழ்வியல் தத்துவங்களை வலியுறுத்தி, தான் கூறவந்த கருத்துக்களை வாசகர்களின் மனதில் அழிக்க முடியாத வகையில் துல்லியமாக வடித்துள்ளார்.

மனித உறவுகள், வர்க்கம், சாதி தொடர்பான சமூக பிரச்சினைகளை முன்வைத்து, எளிய உரைநடையில் சமுதாயத்தின் பல்வேறு அடுக்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாத்திரங்களின் மூலம் தனது சிறுகதைகளை படைத்துள்ளார்.

# உரும்பிராய் பகுதியில் கசிப்புடன் மூவர் கைது



யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரிய பண்டார அவர்களின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட மூவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் தெற்கு செல்வபுரம் பகுதியில் வைத்து மூன்று சந்தேக நபர்கள் 8 1/2 லீற்றர்கள் கசிப்புடன் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் மூவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொலைச் சந்தேகநபர் கைது

கொஸ்லந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹாமுதுருகந்த பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை கழுத்து வெட்டப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என கொஸ்லந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தணமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கொலை செய்யப்பட்டவர் கடந்த 18 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் எனத் தணமல்வில பொலிஸாருக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து காணாமல் போன நபர் கொஸ்லந்த பிரதேசத்தில் உள்ள வனப்பகுதி ஒன்றில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணையின்போது, கொலை செய்யப்பட்டவர் இறுதியாக வேறொரு நபருடன் ஹாமுதுருகந்த பகுதிக்குச் சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கொலை செய்யப்பட்டவருடன் சென்ற பலஹருவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேகநபர் கொலை செய்யப்பட்டவரின் கழுத்தை வெட்டி அதனை புதைத்து சடலத்தை மாத்திரம் வனப்பகுதியில் வீசியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்டவரும் சந்தேக நபரும் ஊவா குடா ஓயா பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருடன் தகாத உறவில் ஈடுபட்டிருந்துள்ள நிலையில், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இந்த கொலை சம்பவம் தொடர்பில் ஊவா குடா ஓயா பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணும் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பதுளையில் நடந்த விபத்தில் படுகாயமடைந்த பல்கலை மாணவன் சிகிச்சை பயனின்றி சாவு

களப்பயிற்சிக்காக சென்ற வேளையில் பஸ் வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் படுகாயம் அடைந்த சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மாணவரொருவர் 23 நாள்களின் பின்னர் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் 2019 ஆம் ஆண்டு கணிதப் பிரிவு மாணவனான கைலைநாதன் சிந்துஜன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி களப்பயிற்சிக்காக கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று பதுளை - மஹியங்கனை வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 36 பேர் காயமடைந்துள்ள நிலையில் 4 பேர் உயிரிழந்திருந்தனர்.

காயமடைந்தவர்கள் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் 6 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், படுகாயமடைந்திருந்த சிந்துஜன் கடந்த வாரம் இரத்மலானையில் அமைந்துள்ள பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இதனையடுத்து, அவர் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பதுளை விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 5 ஆக உயர்ந்துள்ளது.

# ஆற்றில் வீழ்ந்து ஜீப் விபத்து சகோதரர்கள் இருவர் சாவு



குளியாப்பிட்டிய - ஹெட்டிபொல வீதியில் கம்புராபொல புத்கமுவ பாலத்திற்கு அருகில் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் சகோதரர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த ஜீப் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி புத்கமுவ ஆற்றில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குளியாப்பிட்டியவிலிருந்து ஹெட்டிப்பொல நோக்கிப் பயணித்த ஜீப் வாகனம் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது ஜீப் வாகனத்தில் இருந்த சகோதரர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ள நிலையில் பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டு குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் குருணாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 25 மற்றும் 27 வயதுடைய சகோதரர்கள் இருவர் ஆவர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் குருணாகலில் கைது

குருணாகல், கிரியுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலகம்மில்லவ பிரதேசத்தில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கிரியுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

கிரியுல்ல பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குருணாகல், மீவெல்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடையவர் ஆவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கிரியுல்ல பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



## குறைந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் விரைவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேர்தலுக்கு முன்மொழியப்பட்ட வேட்பாளர்களில் சிலர் உயிரிழந்துள்ளதோடு சிலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

புதிய வேட்புமனுக்களை கோருவதா இல்லையா என்பது தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடப்படவுள்ளது.

தேர்தல் திகதி தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. பெரும்பாலும் அடுத்தாண்டின் முற்பகுதியில் தேர்தல் நடத்தப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்றார்.

## தேசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அரசியல் குழுக் கூட்டம் என்பன வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

கூட்டணியின் ஒரு தேசியப் பட்டியல் இடத்திற்கு ரவி கருணாநாயக்க தன்னை நியமித்துக்கொண்ட நிலையில் எஞ்சிய ஒரே ஆசனத்திற்கு கூட்டணிக்குள் தொடர்ந்து அடிபாடு நிலவிவருகின்றது. இந்த நிலையிலேயே தமக்கு அந்த ஆசனம் கட்டாயம் வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் நிமல் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சிக் கூட்டங்கள் தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

நீதிமன்ற உத்தரவுக்கமைய வெகு விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும். எனினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்கள் பலர் கட்சி மாறியுள்ளனர். சிலர் உயிரிழந்துள்ளனர்.

எனவே அதே வேட்புமனுவின் கீழ் தேர்தலில் போட்டியிடுவது பொருத்தமானதாக இருக்காது. எனவே தற்போதைய ஆளும்தரப்பு தனது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி பழைய வேட்புமனுவை இரத்து செய்வதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, புதிய வேட்புமனுவைத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

புதிய ஜனநாயக முன்னணியுடன் கூட்டணியமைத்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டோம். அதற்கமைய எமது கட்சிக்கும் தேசிய பட்டியல் ஆசனமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கின்றோம். இது தொடர்பில் அந்தக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் எமக்கு அநாவசியமானவை. எனவே எமக்காக ஆசனம் எமக்கு வழங்கப்பட வேண்டும்.

அதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் சுதந்திர கட்சியிலிருந்து யாரைத் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது என்பதைத் தீர்மானிப்போம். அதேவேளை மக்களுக்கு பெரும் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சியைக் கைப்பற்றிய ஆளும்தரப்பு அவற்றை நிறைவேற்றவேண்டும். அதற்கான அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம் என்றார்.

## மஹிந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தேசப்பிரியவின் மனைவி அம்பலாங்கொடை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இரண்டு எரிவாயு சிலிண்டர்கள், ஒரு தொலைக்காட்சி, இரண்டு தங்க நெக்லஸ்கள் மற்றும் நான்கு கைக்கடிகாரங்கள் ஆகியவை எடுத்துச் செல்லப்பட்டன.

தற்போது கொழும்பில் வசிக்கும் தேசப்பிரிய தம்பதியினர் வார இறுதி நாட்களில் அம்பலாங்கொடை வீட்டுக்குச் செல்வது வழக்கம். நேற்று மாலை வீட்டுக்குச் சென்றபோது வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டிருப்பதனைக் கண்டுள்ளனர்.

முறைப்பாட்டின் பேரில் அம்பலாங்கொடை பொலிஸார் குற்றவாளிகளை கைது செய்ய விசாரணை நடத்துகின்றனர்.

## நல்லூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வெட்டுக்கள் அடங்கிய நினைவாலயம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நவம்பர் 27 வரையில் இது அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

1982 கார்த்திகை 27 இலிருந்து 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் எமக்கு விபரங்கள் பெற்றுக்கொள்ள முடிந்த 24,379 வீரர்களின் பெயர்களினை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கி நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# கொழும்பு, காக்கைதீவு கடற்கரையை சிறந்த இடமாக மாற்ற நடவடிக்கை

## மேல் மாகாண ஆளுநர் நேரில் சென்று பார்வை

கொழும்பு, காக்கைதீவு கடற்கரை பகுதியை சுற்றுலாப் பயணிகளை கவரும் சிறந்த இடமாக மாற்றவும், இரவு வேளைகளில் இயங்கும் அங்காடி கடைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுப்பதோடு, கொழும்பில் குப்பைகளை வீசுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென மேல் மாகாண ஆளுநர் ஹனீஸ் யூசுப் தெரிவித்தார்.

கொழும்பு , காக்கைதீவு கடற்கரை பகுதிக்கு மேல் மாகாண ஆளுநர் ஹனீஸ் யூசுப் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் விஜயம் மேற்கொண்டு குறித்த பகுதியை மேற்பார்வை செய்தார்.

இந்த மேற்பார்வை விஜயத்தின் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே , மேல் மாகாண ஆளுநர் ஹனீஸ் யூசுப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஹனீஸ் யூசுப் -

'கிளீன் ஸ்ரீ லங்கா' என்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் திட்டத்திற்கு அமைய, காக்கைதீவு கடற்கரை பகுதியை குறுகிய காலத்தில் அபிவிருத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இந்தப் பகுதியை சுற்றுலா பயணிகளை கவரும் சிறந்த இடமாக மாற்றவும், இரவு வேளைகளில் இயங்கும் அங்காடி கடைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

காக்கைத்தீவு கடற்கரைக்கு பெருமளவு மக்கள் பொழுதைக் கழிக்க வருவதை வரவேற்கின்றேன். இந்தப் பகுதியில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவில் ஆங்காங்கே குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன.

இது தொடர்பில் கவனம் செலுத்தி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபை ஆணையாளர் பாலித்த நாணயக்கார, உப ஆணையாளர் ரோஹண, கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் லயன் சிதம்பரம் மனோகரன், காக்கைத்தீவு கரையோர பூங்கா முகாமைத்துவ சங்க அங்கத்தவர்கள்,



நகரசபையின் சிரேஷ்ட அதிகாரிகள் , இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபன அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், கடற்படை, பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

களனி ஆற்றின் ஊடாக காக்கைதீவு கடற்கரையில் குவியும் குப்பைகளை அகற்றுவது மற்றும் குப்பைகளை ஆற்றில் போடுவதை எவ்வாறு தடுப்பது, குறுகிய காலத்தில் அங்கு குவியும் குப்பைகளை எவ்வாறு அகற்றி அப்பகுதியை சுத்தமாக வைத்திருப்பது என்பது தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது, கடற்படை அதிகாரிகள் மற்றும் பல திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் , கொழும்பு நகர வாய்க்கால்களில் குப்பைகளைவீசுவதால்,அந்தகுப்பைகள்கால்வாய்களின் வழியே அடித்து செல்லப்பட்டு காக்கைதீவு கடற்கரை பகுதியில் குவிந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனை தடுப்பதற்கு, மக்கள் குப்பைகளை வீசுவதை தவிர்க்க வேண்டும் என கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் அறிவுறுத்தினர். அவ்வாறு குப்பைகளை வாய்க்கால்களில் வீசுவோருகக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினர்.

# ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலிக்கு பொலிஸாரின் ஆலோசனை



நாட்டின் சட்டங்களை மீறாத வகையில் சம்பூர் - ஆலங்குளம்மாவீரர்துயிலும்இல்லத்தில்நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுக்குமாறு பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளதாக சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் க.பண்பரசன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

கடந்தவருடம்சம்பூர்-ஆலங்குளம்மாவீரர்துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வை செய்வதற்கு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தடை உத்தரவால்நினைவேந்தல்செய்ய முடியாமல்போனது.

இம்முறை பயங்கரவாத தடைச்சட்டத்தை மீறாத வகையில் நினைவேந்தல் செய்வதற்கான ஆலோசனைகளைசம்பூர்பொலிஸார்வழங்கியுள்ளனர் எனவும், பொலிஸாரின் ஆலோசனைக்கு அமைவாக பொலிஸார் உட்பட முப்படையினரின் கடமைகளுக்கு குந்தகம் விளைவிக்காத வகையிலும் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இது ஜனநாயக நாடாகும். இந்த நாட்டில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. இந்த விடயம் அரசமைப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பில் குறிப்பிடப் பட்டிருந்த விடயங்களை கூட கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் மறுத்திருந்தார்கள். தற்போதைய புதிய அரசாங்கத்துக்கு வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் பெரும்பான்மை அதிகூடிய வாக்குகளை வழங்கியுள்ளமையானது மீண்டும் தமிழர் தேசம் ஜனநாயக ரீதியில் பயணிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

அந்தவகையில்,புதிதாகஆட்சியைஅமைத்திருக்கின்ற ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடைகள் ஏதும் விதிக்காது எமது உரிமைகளை மதித்து அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், மாவீரர் நாள் நினைவேந்தல் தினத்தை காரணம் காட்டி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சில அரசியல் கட்சிகள் தமது அரசியல் இலாபத்துக்காக நிதி சேகரித்து வருவதாகவும் புலம்பெயர் தேசத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி அல்லது உள்நாட்டில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி உதவி செய்ய விரும்புவோர் வெளிப்படையான எமது கணக்கிலக்கத்துக்கு உதவி செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாத்தறை – திஸ்ஸ வீதியில் விபத்து: இருவர் படுகாயம்





மாத்தறை - திஸ்ஸ வீதியில் ஹுங்கம பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இரண்டு டிப்பர் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது ஒரு டிப்பர் வாகனத்தின் சாரதியும் உதவியாளரும் படுகாயமடைந்துள்ளநிலையில்தங்காலைவைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# 'அஸ்வெசும'வுக்கு விண்ணப்பிக்க தவறியோருக்கான அறிவித்தல்

அஸ்வெசும திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகளை பெறுவதற்காக விண்ணப்பிக்கத் தவறிய பயனாளிகள் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசெம்பர் 2 ஆம் திகதி வரை மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

இக்கொடுப்பனவுகளைபெறுவதில்உள்ளபிரச்சினைகள்,முறைப்பாடுகள் தொடர்பில் பயனாளிகள் உரிய அதிகாரிகளுக்கு இம்மாதம் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் 15 ஆம் திகதி வரை தெரிவிக்க முடியும்.

# 3 நாள்களாகக் காணாமல் போயிருந்தவர் ஆற்றின் அருகே இருந்து சடலமாக மீட்பு

கேகாலை, மங்களகம பிரதேசத்தில் உள்ள ஆற்றுப் பகுதிக்கு அருகில் வெள்ளிக்கிழமை இரவு ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மங்களகம பொலிஸார் தெரிவித்தனர்.

கேகாலை, மங்களகம பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 20 ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மூன்று நாள்களாக வீடு திரும்பாமல் இருந்துள்ளார்.

இதனால் சடலமாக மீட்கப்பட்டவரின் சகோதரன், காணாமல் போனவரை தேடி சென்ற போது ஆற்றுப் பகுதிக்கு அருகில் வைத்து சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மங்களகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்வேறு திருட்டுகளுடன் தொடர்புடையவர் போதைப்பொருளுடன் நவகமுவவில் கைது

பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் போதைப்பொருளுடன் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார் என நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

நவகமுவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் நவகமுவ - தெடிகமுவ பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த ஓட்டோ ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தெடிகமுவ பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் 750 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பல்வேறு பிரதேசங்களில் திருடப்பட்டதாகக் கூறப்படும் ஓட்டோ, 04 கையடக்கத் தொலைபேசிகள், 02 கைக்கடிகாரங்கள் மற்றும் 02 வளையல்கள் உள்ளிட்ட பொருள்கள் சந்தேக நபரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபருக்கு எதிராக கடுவலை மற்றும் ஹோமாகம நீதிமன்றங்களில் 04 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நவகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உடுவில் மகளிரின் 200 ஆவது ஆண்டு; சைக்கிள் பவணியும் நடை பவணியும்










உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சைக்கிள்பவணியும்நடைபவணியும்நடைபெற்றது.

சைக்கிள் பவணி 1816 ஆம் ஆண்டு இதே அமெரிக்கன் மிசனெறிகளால் உருவாக்கப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி றொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் டானியல் புவரின் உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டுதென்னிந்தியதிருச்சபையின்பேராயர் கலாநிதி வே.பத்மதயாளனால் பாடசாலைக்கொடி அசைக்கப்பட்டு பேரணி ஆரம்பித்துவைக்கப்பட்டது.



இந்தப் பேரணியில் முன்னாள் அதிபர்கள் முதலாவது அதிபர் வின்ஸ்லோவின் கொல்லு கொல்லு பேரன், ஆசிரியர்கள், பழைய மாணவிகள் என இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2024இல் வெளியிடப்பெற்றது